முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 55/2006

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாள் பி..த.சா.6–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவஞானம் | வயது | : | 77 |
| தந்தை/கணவர் பெயர் | : | கோவிந்தன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி தாக்கல் செய்த ஆவணங்களை நான் நேரடியாக பார்த்து தெரிந்து கொண்டேன். மூதாதையர் அனுபவம் பற்றி கேள்விபட்டு தான் சொல்கிறேன் என்றால் அனுபவப்பட்டதை சொல்கிறேன். 2007 முதல் நான் தான் வழக்கு சொத்தினை அனுபவம் செய்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அனுபவத்தில் இருந்த 10600 சதுர அடி இடத்தினை வாதிகள் அபகரித்துக்கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் 10600 சதுர அடி இடத்தினை அபகரித்துக்கொண்டதற்கான ஆவணங்கள் எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து வாதிகளுக்கு சொந்தமானது என்பதால் என்னிடமிருந்து அபகரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால்சரியல்ல. அசல் வழக்கு 40/2012 பற்றி எனக்குத் தெரியாது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் அசல் வழக்கு 40/2012 ல் என்னை பார்ட்டியாக சேர்க்காததால் என்னை கட்டுப்படுத்தாது என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

இந்த வழக்கு காலவரையயரையலால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 07.08.2022 ஆவணமானது வாதிகளை கட்டுப்படுத்தாது மற்றும் சட்ட ரீதியாக செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தேவையில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கான ஆவணங்களை கடைசியாக வழக்கில் தாக்கல் செய்யும் போது பார்த்தேன். எனக்கு பார்வை குறைபாடு என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குசொத்து பற்றி எனக்குத் தெரியாது என்பதும், நானும் என் மூதையாதைரும் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் இருக்கவில்லை என்பதும் சரியல்ல, நான் பிறந்தது முதல் தற்போது வரை வழக்கு சொத்தில் இருந்து வருகிறேன். எந்த அடிப்படை ஆவணமும் இல்லாமல் வழக்கு சொத்து என் அனுபவத்தில் இருப்பதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யான சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**D6 to D12 தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் பிறந்தது முதல் வழக்கு சொத்தில் தான் குடியிருக்கிறேன். சேகர் வகையறாவிற்கு சொத்தில் பாத்தியம் எதுவும் இல்லை. சேகர் வகையறா பட்டா வாங்கியுள்ளது பற்றி எனக்குத் தெரியாது.

**D 1 முதல் D3 தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கமாக கோடீஸ்வரன் குடியிருக்கிறார் என்றால் ஆமாம். அவர் பெயர் கோடீஸ்வரன், அவர் இந்த வழக்கில் வாதியா என்று எனக்குத் தெரியாது.

வழக்கு சொத்தில் நான் பிறந்தது முதல் 77 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்தது ஸ்ரீ ராகவாம்மாள் அறக்கட்டளை என்றால் ஆமாம், அது பதிவு செய்யப்படாதது என்று தெரியும். 77 வருடங்களாக குடியிருப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். எனக்கு யாரும் இந்த வழக்கில் குடியிருக்க கூடாது என்று நோட்டீஸ் எதுவும் இதுவரை அனுப்பவில்லை. இந்த வழக்கு சொத்தில் தற்போதும் நான் தான் உள்ளேன், என் தாயார் தவறிவிட்டார். என்னுடன் என் தங்கையும்இருக்கிறார்.